**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF THIRU. R. MONISH KUMAR OVER AN EXTENT OF 3.16.0 HEC (TOTAL CLUSTER AREA 11.25.0 HEC) LOCATED IN S.F.NO. 139/21A,139/21B,139/21C,139/22A,139/22B,139/23,139/24,139/25A,139/25B,139/25C,139/26,139/27,139/28,139/29,140/1,140/2,140/3,141/42A,141/43A,141/44,141/45,141/46,141/47,141/48,141/49,148/11,148/12A,148/12B,148/14,148/15A,148/15B and 148/8 MENALLUR VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.10.2023 AT 11.00 A.M. IN M/S. R.S.E MAHAL, MAMANDUR, POONGAVANA KUMARASAMY NAGAR, NO. 316/N, KANCHIPURAM TO VANDAVASI ROAD, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI-631 702.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Dr. M. Priyadharshini | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Dr.P. Kamaraj | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Thiru. M. Mahaboob Khan | Assistant Geologist,<br>AD Mines Office,<br>Tiruvannamalai. |
| 6. | Publics and Environmentalists | 67 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone quarry. The District Environmental Engineer stated that for obtaining the Environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed Rough stone and Gravel Quarry of Thiru. R. Monish Kumar over

an extent of 3.16.0 hectare in Menallur Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the minutes will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing was published in New Indian Express (English) & Daily Thanthi (Tamil) on15.09.2023 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed rough stone quarry of Thiru. R. Monish Kumar Rough Stone & Gravel Quarry.

Further, the District Environmental Engineer has informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the Environment Impact Assessment Authority.

The District Revenue Officer requested the project proponent to explain the EIA study conducted by them to the public in detail.

On behalf of the project proponent Thiru. B. Swaminathan, the Consultant, M/s. Creative Engineers & Consultants, Chennai welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

Then the Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

The following are the views represented by the public.

**1. Mr. Ezhumalai, Tiruvannamalai.**

He said that the People are greatly affected by these quarries. Roads get dusty and polluted. If they give 50 feet for drilling recognition, they take 500 feet for drilling stones and converting them into blue metals. And also due to the heavy traffic of trucks, the roads have become uneven and become unusable for the public. So, I pray to stop the quarries and give new life to the people. Do people's lives matter? Otherwise are these quarries important? Clarify that. So, I humbly request you to stop all the quarries and let the villagers live. He ended his speech by saying Thank you.

**2. Mr. Pradhapan, Poonaithangal Village,**

He said that the Trucks do not have registration number. Now you are holding feedback meeting but after a year if there is any problem no one comes and listens. If a quarry is coming to a town, the address of the quarry should be written on a board and placed outside the Panchayat office. But nobody does that. Because in case of any accident due to the vehicles of that quarry we can reach by looking at the number and address on that board.

District Revenue Officer who responded to this said that report this grievance to the Village Administrative Officer of your village through a petition, action will be taken further. Or write this in a petition and submit it to us now, appropriate action will be taken.

And the person said, cover the stones with a sheet while loading the trucks? What will happen if those uncovered stones fall on the school children who are walking on the side of the road? We are the ones who suffer. He concluded his speech by saying Thank You.

**3. Mr. Muthuswamy, Tiruvannamalai.**

He said that When I met the agriculturists of this village, there were two biggest grievances on their side. One was the quarry should be two kilometers away from the village but it is within 600 meters. Secondly, you can give permission for those quarries after constructing a good road to their village. Because too many school students come and go through that road and too many lorries are going without registration number. Also, it would be better if the Environmental Officer follow the rules to prevent pollution

coming out of the quarry. He concluded his speech by asking you to operate the quarry without any harm to the people. . He ended his speech by saying Thank you.

**4. Mrs. Parvathi, Tiruvannamalai.**

She said that I humbly request you not to operate this quarry. People are affected. She ended her speech by saying thank you.

**5. Mr. Bhaskar, Menallur Village,**

He said that We are not affected by the construction of this quarry. As a result, our villagers get employment opportunities and 20-30 families were surviving by this. But this quarry should provide us road facility and drinking water facility. Likewise, if there is any harm or accident to the people of the village due to this quarry vehicles, the operator of the quarry should stand up and take appropriate action. So, on behalf of all the people of our town, I request that this quarry can come. And I have expressed my grievances through a petition also. He ended his speech by saying Thank you.

**6. Chandirasekar, Menallur Village,**

He said that the development of the industry is the development of the country. However, this quarry should be operated within the norms set by the government. Also, this quarry should provide employment to people belonging to our Panchayat. He concluded his speech by saying that we have inspected the place where the quarry is located and it is located at a certain distance from the village. . He ended his speech by saying Thank you.

**The following 8 members of the public have expressed their opinion in writing that they have no objection to the operation of this quarry. They have also requested to provide them with employment opportunities in the proposed quarry.**

**And one public have expressed their opinion in writing that they have objection to the operation of this quarry.**

| S. No | Name and Place | Comments |
|---|---|---|
| 1 | K. Ramakrishna, Hyderabad | Expressed support in favour of the unit |
| 2 | K. Govardhan, Hyderabad | Expressed support in favour of the unit |
| 3 | T. Anil Reddy, Telegana | Expressed support in favour of the unit |
| 4 | S.K. Rahman, Andhra pradesh | Expressed support in favour of the unit |
| 5 | A. Gopal Reddy, Hyderabad | Expressed support in favour of the unit |
| 6 | SK. Chary, Telegana | Expressed support in favour of the unit |
| 7 | Paloju Sydaiah, Hyderabad | Expressed support in favour of the unit |
| 8 | Mr. Ezhumalai, Tiruvannamalai | Expressed objection against to the unit |

**Thereafter no views/comments were raised.**

This public hearing process came to an end with the vote of thanks by Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 15.09.2023 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 6 & 67 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting and social media- 8 numbers.

DEE/TNPCB,
Tiruvannamalai.

District Revenue Officer,
Tiruvannamalai.

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமம், புல எண். 139/21A, 139/21B, 139/21C, 139/22A,139/22B, 139/23,139/24,139/25A, 139/25B,139/25C,139/26, 139/27,139/28,139/29, 140/1,140/2, 140/3, 141/42A, 141/43A,141/44,141/45,141/46,141/47,141/48,141/49,148/11,148/12A,148/12B, 148/14,148/15A,148/15B and 148/8, 3.16.0 ஹெக்டேர் (மொத்த கூட்டுபரப்பளவு 11..25.0 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். R. மோனிஷ் குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நடத்திய மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு 18.10.2023 அன்று தி/ள். R.S.E மஹால் மாமண்டூர், பூங்காவன குமாரசாமி நகர், No. 316/N, காஞ்சிபுரம் – வந்தவாசி சாலை வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.

பங்கேற்றோர்:

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவர். மு. பிரியதர்ஷினி | மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை. |
| 2. | முனைவர்.பா. காமராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5. | திரு. மு. மஹபூப்கான் | உதவி புவியியலாளர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (67 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்கவந்துள் பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசுகட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமம், மொத்தம் 3.16.0 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். R. மோனிஷ் குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். R. மோனிஷ் குமார் சாதாரண கல் மற்றும் கிராவல்_குவாரிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். R.S.E மஹால் 18.10.2023 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் செய்தி தாள்களில் 15.09.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் தொழிற்சாலை நிர்வாதத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு. B. சுவாமிநாதன், ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும், தி/ள். கிரியேட்டிவ் இஞ்சினியர்ஸ் & கன்சல்டன்ஸ், சென்னை நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு. ஏழுமலை, திருவண்ணாமலை.</u>

இவர் கூறுகையில், இந்த குவாரிகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சாலைகளில் தூசிகள் கிளம்பி மாசு படுகின்றன. 50 அடி துளையிட அங்கீகாரம் கொடுத்தால் 500 அடி துளையிட்டு கற்களை எடுத்து புளூ மெட்டல்களாக மாற்றிக் கொள்கிறார்கள். லாரிகளின் அதிக போக்குவரத்தினால் சாலைகள் மேடும் பள்ளமாகி பொதுமக்களுக்கு பயன்படாதவாறு போய்விட்டன. எனவே, குவாரிகளை நிறுத்தி மக்களுக்கு புது வாழ்வு அளிக்க வேண்டிக்கொள்கிறேன். மக்களின் வாழ்வு முக்கியமா? இல்லையெனில் இந்த குவாரிகள் முக்கியமா? என்பதை தெளிவு படுத்துங்கள். எனவே, அத்தனை குவாரிகளையும் நிறுத்தி கிராம மக்களை வாழ வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் நன்றி, எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

2. திரு. பிரதாபன், பூனைத்தாங்கல் கிராமம்.

இவர் கூறுகையில், லாரிகளில் பதிவு எண் இல்லை. தற்போது கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துகிறீர்கள் ஆனால் ஒரு வருடத்திற்கு பிறகு ஏதேனும் பிரச்சனை என்றால் யாரும் வந்து கேட்பதில்லை. ஒரு ஊரில் குவாரி வருகிறது என்றால் அந்த குவாரியின் முகவரியை ஒரு பலகையில் எழுதி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வெளியே வைக்க வேண்டும். ஆனால் அதை யாரும் செய்வதில்லை. ஏனெனில் அந்த குவாரியின் வாகனங்களால் ஏதேனும் விபத்து ஏற்பட்டால் நாங்கள் அந்த பலகையில் இருக்கும் எண் மற்றும் முகவரியை பார்த்து அணுக முடியும்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், தங்கள் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரிடம் இந்த குறையை மனு ஒன்றின் மூலமாக தெரிவியுங்கள் தக்க நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கிறோம். அல்ல தற்பொழுதே இதனை மனு ஒன்றில் எழுதி எங்களிடம் சமர்ப்பியுங்கள் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விளக்கினார்.

மேலும் அந்த நபர் கூறுகையில், லாரிகளில் லோடு ஏற்றி செல்லும் பொழுது அந்த கற்களின் மீது ஒரு தார்ப்பாய் கொண்டு மூடினால் என்ன? மூடப்படாத அந்த கற்கள் அந்த சாலை ஓரம் நடந்து சென்று கொண்டிருக்கும் பள்ளி மாணவர்கள் மீது விழுந்தால் என்னவாகும்? பாதிக்கப்படுவது நாங்கள் தான். என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

3. திரு. முத்துசாமி, திருவண்ணாமலை.

இவர் கூறுகையில், இந்த கிராமத்தின் விவசாய பெருமக்களை சந்திக்கும் பொழுது அவர்களின் பெரிய குறைகளாக வைத்தது இரண்டு விஷயங்கள். ஒன்று, குவாரியானது இரண்டு கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்க வேண்டும் ஆனால் 600 மீட்டருக்குள் இருக்கிறது. இரண்டாவதாக, எங்கள் கிராமத்திற்கு நல்ல ஒரு சாலையை அமைத்த பிறகு அந்த குவாரிகளுக்கு நீங்கள் அனுமதி கொடுக்கலாம். ஏனெனில், அதிகப்படியான பள்ளி மாணவர்கள் அந்த சாலை வழியே வந்து செல்கிறார்கள் பதிவு எண் இல்லாமல் அதிகப்படியான லாரிகள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும், சுற்றுச்சூழல் அலுவலர் அவர்கள் அந்த

குவாரியிலிருந்து மாசு வெளிவராமல் இருக்க என்ன வழிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றை பின்பற்றினால் நன்றாக இருக்கும். மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் நீங்கள் குவாரியை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தனது உரையை முடித்துக் கொண்டார்.

1. 4, திருமதி. பார்வதி, திருவண்ணாமலை.

இவர் கூறுகையில், இந்த கல் குவாரியை நடத்த வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். நன்றி எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

5,. திரு. பாஸ்கர், மேனல்லூர் கிராமம்,

இவர் கூறுகையில், இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. இதனால் எங்கள் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன, 20–30 குடும்பங்கள் பிழைக்கின்றன. ஆனால், இந்த குவாரி எங்களுக்கு சாலை வசதியும் குடிநீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோல், ஊர் மக்களுக்கு ஏதேனும் பாதிப்பு அல்லது விபத்து என்றால் குவாரியை நடத்துபவர் முன் நின்று தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, இந்த குவாரி வரலாம் என்று எங்கள் ஊர் மக்கள் அனைவரின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது குறைகளை மனுவின் மூலமாக தெரிவித்திருக்கிறேன். நன்றி. எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

6,. திரு. சந்திரசேகர், மேனல்லூர் கிராமம்,

தொழில்துறையின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. ஆனால், அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த குவாரி இயங்க வேண்டும். மேலும், எங்கள் பஞ்சாயத்தை சேர்ந்த மக்களுக்கு இந்த குவாரி வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும். அந்த குவாரி அமைய உள்ள இடத்தை நாங்கள் ஆய்வு செய்தோம் அது கிராமத்திற்கு குறிப்பிட்ட தொலைவிலேயே அமையவிருப்பதால் இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சியபனையும் இல்லை. என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 7 நபர்கள் எழுத்துமூலமாக தங்களுக்கு இந்தகுவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை எனவும், ஒருவர் இந்தகுவாரி அமைவதற்கு எதிர்ப்பு என கருத்து தெரிவித்துள்ளனர்**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | கிராம பொதுமக்கள், மேனலூர், திருவண்ணாமலை | ஆதரவு தெரிவித்தார் |
| 2 | க. கோவர்தன், ஐதராபாத் | ஆதரவு தெரிவித்தார் |
| 3 | டீ. அனில்ரெட்டி, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 4 | எஸ்.கே.ரஹுமான், ஆந்திராபிரதேஷ் | ஆதரவு தெரிவித்தார் |
| 5 | அ. கோபால்ரெட்டி, ஐதராபாத் | ஆதரவு தெரிவித்தார் |
| 6 | எஸ்.கே. சாரி, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 7 | பி. சய்தய்யா, தெலங்கானா | ஆதரவு தெரிவித்தார் |
| 8 | C. ஏழுமலை, மாவட்ட தலைவர், போளூர் பாரதிய ஜனதா கட்சி, திருவண்ணாமலை | எதிர்ப்பு தெரிவித்தார் |

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.15.09.2023).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (6 பக்கங்கள் 67 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 8 மனுக்கள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை